
# LAABH SAMACHAR

Volume: 10 | Issue : 09 | DECEMBER 2021 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE

To






METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்



# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014



## Thirumalay Tradings

presents

V Carry Bags

MINIMUM ORDER 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India


* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |

# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

நம் பாரத நாட்டின் முப்படைத் தலைமைத் தளபதி திரு. பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் ராணுவ வீரர்களின் மரணம், நாட்டு மக்கள் அனைவரையும் கவலை அடையச் செய்துள்ளது. விபத்தில் மரணம் அடைந்த தலைமைத் தளபதி திரு. பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் ராணுவ வீரர்கள் அனைவருக்கும் ஆழந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

சுங்குடி சேலை, டெக்ஸ்டைல் ஃபேப்ரிக் மற்றும் காலணி போன்ற தயாரிப்புகளுக்கு மத்திய அரசு உயர்த்தியுள்ள ஜி.எஸ்.டி. வரியால் மேற்படி துறையினர் கடுமையாய் பாதிப்படைந்தள்ளனர். கொரோனா தொற்றிலிருந்து மேற்படி தொழிற்துறையினர்கள் தற்போது மெல்ல மெல்ல மீண்டு வரும் இந்த சூழலில், மத்திய அரசுயின் வரி உயர்வு, இத்துறையினருக்கு அதிர்ச்சியும், வருத்தமும் அளிக்கச் செய்துள்ளது. ஆகவே, இதனை நடைமுறைப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தி தொழில் துறையினரின் நலனில் அக்கறை கொண்டு பரிசீலிக்க வேண்டும் என்று ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும், எல்லா வளமும், நலமும் பெற்று வையத்தில் செழித்து வாழ்ந்திட, தைத்திருநாள் மற்றும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி — குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்**

**பொருள்:** மனம் கெடாமல் நல்லதாகவே இருப்பது ஒருவனுடைய ஆன்மாவுக்குப் பலம் தரும். ஆனால் மனம் நல்லதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சேர்ந்திருக்கும் இனம் நல்லதாக இருந்தால் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாச் சிறப்புக்களும் உண்டாகும்.

அதிகாரம் 46 — சிற்றினம் சேராமை — அரசியல்

(அறிவு ஒழுக்கத்தில் குறைந்தவருடன் சேராமை)

**Sourashtra Chamber of Commerce Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

**Kindly Save our Whatsapp No:**
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

உலகெங்கும் உள்ள நம் அனைத்து சமுதாய மக்களுக்கும் **தைத்திருநாள்** மற்றும் **இனிய பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.**

**27.11.2021** – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் **9வது செயற்குழு கூட்டம்**, குற்றாலத்தில் மாலை 5 மணிக்கு நடைபெற்றது. இதில் சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**27.11.2021** – குற்றாலத்திற்கு (செயற்குழு கூட்டத்திற்கு) செல்லும் வழியில் காலை 10 மணிக்கு, விருதுநகர் அருகே, சிறு தானிய உணவுகள் தயாரிக்கும் ஆலைக்கு **(இண்டஸ்டிரியல் விசிட்)** சிறப்பு அழைப்பாளர் திரு. K.V. **குமரேசன்** அவர்களின் ஏற்பாட்டில், சேம்பர் நிர்வாகக்குழுவினர்கள் அனைவரும் சென்று பார்வையிட்டோம்.

**07.12.2021** – டிசம்பர் மாத தொழில் கூட்டம், **சிறு, குறு தொழில்களுக்கு கடன் வாய்ப்புகள்** என்ற தலைப்பில் மாலை 6.45 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில், சிறு தொழில் வளர்ச்சிக் கழக துணை மேலாளர் திரு. R. **பரமசிவம்** மற்றும் மேலாளர் திரு. S. **சந்திரசேகரன்** ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

– K.K. **தினேஷ்**

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் முன்னாள் தலைவரும், லாப் ஸமாச்சார் இதழின் ஆசிரியருமான திரு. K.K.G. **பிரபாகரன்** அவர்கள், **ஸ்ரீமந் நடன கோபால நாயகி மந்திர் கவுன்சில்**–ன் **துணைத்தலைவராக** தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, சேம்பர் உறுப்பினர் திரு. R.B.R. **ராமசுப்பிரமணியன்** அவர்கள் **இணைச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்**. நமது லாப் ஸமாச்சார் இதழ்குழு சார்பாக இருவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

துறை சார்ந்த வல்லுனர்களின் சேவையினை பாராட்டி, பாரதி யுவகேந்திரா சார்பில் பாரதியார் பிறந்த நாளை ஒட்டி நடந்த விழாவில், சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்களுக்கு பாரதி புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது. நமது சேம்பர் உறுப்பினர் திரு. R.K. **பாபுலால்** அவர்களுக்கும் இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இந்த விழா, முன்னாள் அமைச்சர் திரு. R.B. **உதயகுமார்** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. எழுத்தாளர் திரு. **லேனா தமிழ்வாணன்**, நகைச்சுவை நடிகர் திரு. **வையாபுரி** ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் மற்றும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை**

- B.S. **ஜெனார்த்தனன்**

### இரங்கல்



சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், நந்தினி எலக்ட்ரிக்கல்ஸ் உரிமையாளருமான திரு. **M.B. ரமேஷ்** அவர்கள் கடந்த 06.12.2021 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.




**அங்கத்தினர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் & இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்**






முகக்கவசத்தை முறையாக அணியுங்கள்



https://youtu.be/-JMVniVMLr0

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk





# வீரவணக்கம்



**விபத்து:**
நமது நாட்டின் முப்படை தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி, ராணுவ வீரர்கள் உட்பட 14 பேர் சென்ற ராணுவ ஹெலிகாப்டர் தமிழகத்தின், நீலகிரி மாவட்டம் குன்னூர் மலைப்பகுதியில், 08.12.2021 அன்று பயங்கர விபத்தில் சிக்கியது.

இதில், நமது முப்படை தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி உட்பட 13 பேர் பலியானது நாட்டு மக்கள் அனைவருக்கும் அதிர்ச்சியடைச் செய்துள்ளது. குன்னூர், வெலிங்டனில் ராணுவ அதிகாரிக்களுக்கான பயிற்சி கல்லூரி உள்ளது. அங்கு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்காக சென்ற போது இந்த கோர விபத்து நடந்துள்ளது. காலை, 11:47 மணிக்கு சூலூரில் இருந்து புறப்பட்ட ஹெலிகாப்டர், மதியம் 12:10 மணிக்கு காட்டேரி பகுதியில் பனிமூட்டம் காரணமாக தாழ்வாக பறந்த ஹெலிகாப்டர் மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது. ஹெலிகாப்டர் தரையிறங்க வேண்டிய இடத்திலிருந்து 9 கி.மீ., தொலைவில் விபத்து நேர்ந்துள்ளது.

**குடும்பம், கல்வி மற்றும் பணி:**
இந்தியாவின் முதல் முப்படைத் தலைமை தளபதியானவர் ஜெனரல் பிபின் ராவத் ஆவார். வயது. 63. உத்தரகாண்ட் மாநிலத்தில் பிறந்தவர். இவரது மனைவி மதுலிகா ராவத். இவருக்கு இரண்டு மகள்கள். இவரது தந்தை ராணுவத்தில் லெப்டினன்ட் ஜெனரலாக இருந்தவர்.

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் ராணுவ கல்லூரியில் பட்டம் பெற்றவர். சென்னை பல்கலையில் நிர்வாகவியல், கம்ப்யூட்டர் கல்வியியல், டிப்ளமோ பட்டம் பெற்றவர். ராணுவத்தின் கூர்க்கா ரைபிள்ஸ் படைப்பிரிவில் சேர்ந்தார். கேப்டன், மேஜர், லெப்டினன்ட், கர்னல், பிரிகேடியர், மேஜர் ஜெனரல், லெப்டினன்ட் ஜெனரல் என பதிவு உயர்வு பெற்று இவர், 2017-ல் ராணுவ தளபதி ஆனார். இவரின் 37 ஆண்டு கால சிறப்பான செயல்பாடுகளால், மத்திய அரசு இவரை முப்படை தலைமை தளபதியாக 2020 ஜன., 1ல் நியமித்தது.

**அசாத்திய செயல்கள்:**
சமீபத்தில் நடந்த இந்திய சீனா எல்லை பிரச்சினைக்கு, சீனாவுடன் போர் புரிய இந்திய ராணுவத்தை தயார்நிலைப்படுத்தியவர். ஆப்கானிஸ்தானில் இருந்த இந்தியாவுக்குள் பயங்கரவாத செயல் நடத்தப்பட்டால், இரும்பு கரம் கொண்டு அடக்கப்படும் என்று கூறியவர். சீனாவை எதிர்கொள்ள தொழில்நுட்பங்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கியவர். இந்தியா மேற்கொண்டு மூன்று சர்ஜிக்கல் ஸ்டிரைக் எனப்படும் துல்லிய தாக்குதலில் அவர் பங்கேற்று உள்ளார்.

2016-ல் பாக்கிஸ்தானின் பயங்கரவாத தாக்குதலால் 19 வீரர்கள் கொல்லப்பட்டனர். அதற்கு பதிலடியாக நடத்தப்பட்ட துல்லிய தாக்குதலை திட்டமிட்டு கொடுத்து வழிநடத்தியது தளபதி பிபின் ராவத் ஆவார். அப்போது ராணுவத்தின் துணைத் தளபதியாக இருந்தார், மூன்று மாதங்களுக்குப் பின், அவர் ராணுவ தளபதி ஆனார்.

இதே போன்று, 2019-ல் புல்வாமாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், 40 வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், பாக்., ஆக்கிரமிப்பு காஷ்மீரின் பாலக்கோட்டில் இருந்து பயங்கரவாத முகாம்களை நம் விமானப் படை துல்லியமாக தாக்கி தகர்த்தியது.

இவ்வாறு சமீப காலங்களில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் சீனா நாடுகளின் படை மற்றும் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களை தைரியத்துடன் களமிறங்கி எதிர்கொண்டவர், எதிரிகளை பந்தாடியவர் இன்று கோர விபத்தில் பலியானது நாட்டு மக்கள் அனைவரையும் கவலைக்குள் ஆழ்த்தியுள்ளது. இந்த துணிச்சல் மிக்க மாவீரரை இழந்தது நாட்டிற்கு மிகப்பெரிய இழப்பு.

முப்படை தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் உடன் பயணித்த ராணுவ வீரர்கள் அனைவருக்கும் எங்களது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், ஸௌராஷ்ட்ர சமூக மக்கள் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தையும், அவர்கள் தம் குடும்பங்களுக்கு இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது. அவர்களது ஆன்மா இறைவன் திருவடி சேர பிரார்த்திக்கிறோம். அதோடு, இனி இதுபோன்றதொரு சம்பவம் நிகழாதிருக்க இறைவனை அனைவரும் வேண்டுவோம்.

**வாழ்க பாரதம்!...**
**ஜெய் ஜவான்... ஜெய் ஹிந்த்!...**


PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragnace Pvt. Ltd.
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

### சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் டிசம்பர் மாத தொழில் கூட்டம்

# சிறு, குறு தொழில் வளர்ச்சிக்கு - கடன் வாய்ப்புகள்

ஊரடங்கிலிருந்து வெளிவந்து தொழிலை வளமான பாதைக்குக் கொண்டு செல்ல பலர் திட்டமிட்டுள்ள இந்த தருணத்தில் பணத்தேவையின் அவசியம் இருக்கவே செய்யும். மத்திய அரசும் அதற்குத் தேவையான கடன்களை தொடர்ந்து வங்கி மற்றும் நிதிக் கழகங்களின் வாயிலாக அளித்து வருகிறது.

அதனடிப்படையில், டிசம்பர் மாத நிகழ்ச்சியாக சிறு, குறு தொழில்களுக்கு கடன் வாய்ப்புகள் என்கிற தலைப்பிலான கூட்டம் நமது சேம்பர் அலுவலகத்தில் கடந்த 07.12.2021 அன்று நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் **திரு. T.R. மோகன்ராம்** அவர்கள் தலைமைத் தாங்கி கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் **திரு. T.R. சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சிறப்பு விருந்தினர்களாக சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் துணைப் பொது மேலாளர் **திரு. R. பரமசிவம்** மற்றும் மேலாளர் **திரு. S. சந்திரசேகர்** ஆகியோர் கலந்து கொண்டு கடன் விபரங்கள் குறித்து பேசினர்.

**திரு. R. பரமசிவம்** அவர்கள் பேசுகையில், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவின் அடிப்படைகள் குறித்த விபரங்களை முதலில் வழங்கினார்.





அதன்படி, தங்களது சிறு தொழில் கழகத்தில், தற்போது உள்ள திட்டமானது, 5.85% முதல் 6.5%-தத்தில் தொழில் கடன் வழங்கப்படுகிறது. இந்த விகிதம் முதல் ஒரு வருடத்திற்கு மட்டுமே, அதற்கு அடுத்த வருடம் ரிசர்வு வங்கியின் விதிமுறைகள் படி மாறுதலாகும் என்று தெரிவித்தார். எந்திரம் மற்றும் சிட்கோ பகுதியில் இடம் வாங்குவதற்கு இந்த கடன் ரூ. 20 கோடி வரை வழங்கப்படுகிறது.

கடன் தொகையில் 80% வழங்கப்படும், மீதம் 20% தொழில்முனைவோரின் பங்காகும். புதிய தொழில் தொடங்குபவர்களும் பெறலாம். அவர்கள் 25% - 30% பங்களிக்க வேண்டும், மீதம் சிறு தொழில் கழகம் வழங்கும் என்று தெரிவித்தார். ஏற்கனவே செய்யும் தொழிலின் மேம்பாட்டிற்காக எந்திரம், இடம் வாங்குபவர்களுக்கு பிணையத்தொகை இல்லாமல், அவர்களின் முந்தைய மூன்று வருட பேலன்ஸ் ஷீட் மற்றும் கேஷ் பிரஃபிட் அடிப்படையில் ரூ. 20 கோடி வரை கடன் வழங்கப்படும் என்றும் தெரிவித்து தனது உரையை நிறைவு செய்தார்.

அதன்பிறகு பேசிய, **திரு. S. சந்திரசேகர்** அவர்கள், சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சிறப்புகள் மற்றும் இதில் இணையும் தொழில் முனைவோர்ளுக்கு கிடைக்கக்கூடிய பிற சலுகைகள் குறித்து அருமையாக கூறினார். அங்கத்தினர்களின் பல்வேறு சந்தேகங்களுக்கு இருவரும் மிகத் தெளிவாக பதிலளித்தனர்.

சிறப்பு விருந்தினர்கள் இருவருக்கும் நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் தாய்க்கழகமான சௌராஷ்ட்ர சமூக நலப்பேரவையின் தலைவர் **திரு. K.R. யோகீஸ்வரன்** அவர்களின் கரங்களால் நினைவுப் பரிசு அளிக்கப்பட்டது.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் **திரு. K.K. தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



# சேம்பர் நிகழ்வுகள்



Industrial Visit

குற்றாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 9வது செயற்குழு கூட்டத்திற்கு செல்லும் வழியில், இயற்கை ஆர்வலர் திரு. **சிவக்குமார்** என்பரின் **மோத்திஸ் மில்லட்ஸ்**, சிறுதானிய உற்பத்தி ஆலைக்கு சென்று சேம்பர் குழுவினர் பார்வையிட்டனர்.



9th EC Meeting

27.11.2021 அன்று, குற்றாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 9வது செயற்குழு கூட்டத்தில் சேம்பர் முதுநிலைத் தலைவர் **திரு. K.V. பாலா** கலந்துகொண்டு பேசினார். சேம்பர் தலைவர் **திரு. குமரன் B. ஜகுவா** அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.



Honoring to Chairman of Greeting Committee

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவரின் பிறந்தநாள் பரிசாக இனிப்பு பலகாரத்தை வீட்டிற்கே சென்று அளிக்க ஏற்பாடு செய்த வாழ்த்துக்குழு சேர்மன் **திரு. V.V.ராம்லக்ஷ்மண்** அவர்களுக்கு வாழ்த்து கூறி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. பரிசினை முதுநிலை தலைவர் **திரு. K.V. பாலா** அவர்கள் வழங்கினார். உடன் முன்னாள் தலைவர்கள்.

## மோட்டார் வாகன சட்டம் - நல் உள்ளங்களுக்கு பரிசு

நெடுஞ்சாலைகளில் சாலை விபத்துக்கள் ஏற்படுவது என்பது சாதாரணமானது. உரிய நேரத்தில் உதவி கிடைக்காததால், விபத்தில் சிக்கிய ஏராளமானோர் உயிரிழக்கின்றனர். மத்திய அரசு தற்போது கடுமையான விதிகளுடன் மோட்டார் வாகன சட்டம் 2021-ஐ மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது. அதில், சாலை விபத்துக்களில் படுகாயமடைந்தவர்களை முக்கியத்துவம் வாய்ந்த நேரத்திற்குள் விரைந்து மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் மக்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று மத்திய சாலை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த நேரம் என்பது படுகாயமடைந்து ஒரு மணிநேரத்துக்குள்ளான காலமாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பதன் மூலம், உயிரிழப்பை தடுப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்தத் திட்டத்தின்படி, ரூ. 5000 ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும். நல்ல சேவகர் என்ற பெயரும் கிடைக்கும். நல்ல சேவகர் என்ற சான்றிதழ், ஆண்டுக்கு அதிகபட்சம் 5 முறை வரை வழங்கப்படும். ஒட்டுமொத்த ஆண்டிலும் பரிசு ஒவ்வொருவருக்கும் ரூ. 1 லட்சம் பரிசு வழங்கப்படும். இதற்கான வலைதளத்தை மத்திய அமைச்சகம் விரைவில் தொடங்க உள்ளது. இதில், நல்ல சேவகர் குறித்த முழுமையான தகவல்கள் இடம்பெற்றிருக்கும்.


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ் பொட்டிக்
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்
158 & 158A தெற்கு மாசி வீதி, மதுரை-1. CELL: 92445 00633 | 99433 79499

EXPRESS BRIYANI
Cell: 63852 96296
Anna Nagar | B.B. Kulam
Kalavasal | Villapuram
South Marret Street

# Last Date 31.12.2021




The Income Tax Department strongly urges all taxpayers to view their Form 26AS and Annual Information Statement (AIS) through the e-filing portal to verify the accuracy of the TDS and Tax Payments and avail of pre-filling of ITRs. It is important for taxpayers to cross check the data in the AIS statement with their Bank passbook, interest certificate, Form 16 and Capital gains statement from brokerages in case of purchase and sale of equity/Mutual funds etc.

The Department has been issuing reminders to taxpayers through emails, SMS and media campaigns encouraging taxpayers to file their Income Tax Returns without further delay.

All taxpayers who are yet to file their Income Tax returns for AY 2021-22 are requested to file their returns at the earliest to avoid last minute rush.


**Last date of Income Tax returns File : 31.12.2021**

**Last date of Udyam Registraion : 31.12.2021**
(All existing enterprises registered under EM–Part-II or UAM shall register again on the Udyam Registration)

## மத்திய அரசின் பெண் தொழில் முனைவோர்க்கான விருது

மத்திய அரசின் இந்தியாவை மாற்றியமைக்கும் மகளிருக்கான விருதை கடந்த 2018-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நிதி ஆயோக் அமைப்பின் பெண் தொழில்முனைவோர் பிரிவு வழங்கிவருவதன் மூலம் வெளிப்படுகிறது. இதற்கான பரிந்துரைகளை அளிக்க **டிசம்பர் 31 கடைசி நாள்**. விண்ணப்பப் படிவங்கள் https://wep.gov.in என்ற தளத்தில் கிடைக்கும் பெண் தொழில்முனைவோர் தாங்களாகவே விண்ணப்பிக்கலாம்.

# வரி செலுத்துவோர் வசதிக்காக புதிய வலைத்தளம் துவக்கம்




CBIC புதுப்பிக்கப்பட்ட வரி தகவல் போர்ட்டலைத் தொடங்கியுள்ளது. இந்த போர்ட்டலின் உதவியுடன், அனைத்து மறைமுக வரிச் சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் படிவங்கள் வரி செலுத்துவோர் எளிதாகக் குறிப்பிடும் வகையில் கிடைக்கும்.

http://taxinformation.cbic.gov.in இந்த இணையதளத்தில், சுங்கச் சட்டம், ஜிஎஸ்டி சட்டம், மத்திய கலால் சட்டம் மற்றும் முந்தைய சேவை வரிச் சட்டம் போன்ற அனைத்து வகைகளின் தகவல்கள் கிடைக்கும்.

feedback.taxinfo@icegate.gov.in என்ற மின்னஞ்சலையும் வெளியிட்டுள்ளது. இந்த போர்ட்டலில் வழங்கப்பட்டுள்ள உள்ளடக்கத்தில் ஏதேனும் முரண்பாடு அல்லது பிழை ஏற்பட்டால், பயனர் தனது கருத்தை அனுப்பலாம்.

ஜிஎஸ்டி, சுங்கம், மத்திய கலால் மற்றும் சேவை வரி தொடர்பான சுற்றறிக்கைகள், அறிவிப்புகள், கட்டண அறிவிப்புகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஆர்டர்கள் ஆகியவற்றுக்கான இணைப்புகளை உள்ளடக்கிய சமீபத்திய புதுப்பிப்புகள் (அறிவிப்புகள் மற்றும் சுற்றறிக்கைகள்) என்ற பிரிவும் இந்த போர்ட்டலில் உள்ளது.

இந்த ஒழுங்கமைக்கப்பட்ட மறைமுக வரி உள்ளடக்கம், வரி செலுத்துவோர் மற்றும் வரி நிபுணர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)




Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com


Dr. S.S.Siva Prasath B.D.S., FGDS.
Siva Dental Care
TYPES OF DENTAL CARE
Rct
Orthodontics
Dental Implants
Dentures
Dental Surgery
Cosmetic Dentistry
Oral Hygiene
Periodontology
தினசரி காலை 10.00 to 2.00 மணி ★ மாலை 5.30 - 9.00 மணி
243-A, Kamarajar Salai, Near Alankar Theatre, Madurai - 625 009.
Contact : 86086 66642 E-mail : svprsth@gmail.com

# Annual Information Statement (AIS): A Detailed Guide

**What is Annual Information Statement (AIS)?**

Annual Information Statement (AIS) is a utility/ form available on Income Tax Portal which displays all the financial and tax related information available with the Tax Department with regard to the taxpayer. It is an extension of an earlier available form, called 26AS, on the portal which contained the information only upon taxes deducted and deposited during the year along with the summary of Specified Financial Transactions (SFT). Now, AIS has brought in added features to the old form 26AS by showcasing information upon bank interest earned, dividend income and sale of securities, in addition to tax related information.




**What's New in Annual Information Statement (AIS) for Taxpayers?**

All Information System enables to taxpayers to get a comprehensive view of all the financial information available with the department and accordingly proceed with tax related matters. Also, taxpayers can find details about all material transactions such as sale of listed securities, mutual funds, dividends and interests received, foreign remittances at one place. This will give ease in return filing and others forms.

Apart from this, AIS has an added functionality of accepting feedback from taxpayers. The taxpayers can view their financial information in AIS and in case of any disagreement, they may submit their feedback for amendment of such information. The Tax Information Statement (TIS) will then show edited financial information after incorporating such feedbacks.

**Salient Features of Annual Information Statement (AIS)**

**1. Inclusion of New Information:** AIS is an extension of Form 26AS and includes details upon interest, dividend, securities transaction, mutual fund transactions. Foreign remittance etc.

**2. Data Analytics:** AIS uses data analytics to populate PAN in non-PAN data for inclusion in AIS.

**3. Deduplication of Information:** The AIS removes duplicated information for generation of a simplified Tax Information Summary (TIS) for ease of filing of return

**4. Feedback:** Taxpayer will be able to submit online feedback on the information displayed in AIS and also download information in PDF, JSON, CSV file formats. AIS Utility will enable taxpayer to view AIS and upload feedback in offline manner. AIS Mobile Application is also available that will enable taxpayer to view AIS and upload feedback on mobile.

**Components of Annual Information Statement (AIS)**

An AIS is divided into two parts:

**Part A: General Information**

It displays general information related to a taxpayer such as his name, PAN, Aadhar Number, date of birth, contact details and address.

**Part B: Tax Information Statement (TIS)**

**1. TDS/TCS:** This section displays information about tax deducted at source/ tax collected at source in relation to a taxpayer. It is similar to the information displayed in Form 26AS.

**2. SFT Information:** This section displays information received by tax department from various reporting entities like banks and NBFCs with regard to specified financial transaction undertaken by the taxpayer during the year like purchase/ sale of immovable property.

**3. Payment of Taxes:** It displays the quantum of taxes paid by the taxpayer like advance tax, self-assessment tax along with the details like date of payment, challan number etc.

**4. Demand and Refund:** It displays details regarding any outstanding demand of tax by the department, their quantum and current status at that point of time. It also shows if any refund has been initiated with respect to any assessment year.

**5. Other:** Any other information in relation to sub-rule (2) of rule 114-I is displayed here.

**How to Access Annual Information Statement (AIS)?**

AIS can be accessed by logging on to Income Tax Portal https://eportal.incometax.gov.in/iec. Below is the step-by-step guide to open the same:

**Step 1:** Login on to the income tax portal using the login credentials. The login ID is, generally, the PAN number of the taxpayer.

**Step 2:** After logging in, the AIS option can be found under the 'Service' tab in amongst the other tabs at the top of the page.

**Step 3:** After clicking on to AIS tab under the Service tab, the taxpayer will be redirected to a new AIS portal. The section wise information can be viewed there.

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear · ANAND · Viking · Prithvi INNER WEARS · NAIDU HALL THE FAMILY STORE · JOCKEY INNER WEAR · Poomex · MANGAI NIGHTIES · RASATHE DARLING NIGHTIES · YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
B THE BABY SHOP
ஸ்ரீ அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

## FAQs on Annual Information Statement (AIS)

**Q: How can I view the Annual Information Statement for a specific Financial Year (FY)?**

**Ans:** You can access the Annual Information Statement functionality by following below mentioned steps:

**Step 1:** Login to URL https://www.incometax.gov.in/

**Step 2:** Click on "Annual Information Statement (AIS)" under "Services" tab from the e- filing portal after successful login on e-filing portal.

**Step 3:** Click on AIS tab, on the homepage.

**Step 4:** Select the relevant FY and click on AIS tile to view the Annual Information Statement.

**Q: In what all formats can I download my AIS?**

**Ans:** AIS is available for download by taxpayers in the PDF and JSON formats.

**Q: What all information is available in AIS for various income sources?**

**Ans:** AIS will contain details upon the following:

1. Rent received
2. Salary
3. Dividend
4. Interests from Saving Bank
5. Interest from Deposit
6. Interest from Others like securities

**Q: What is AIS Consolidated Feedback file?**

**Ans:** After submitting the feedback of the Annual Information Statement (AIS), you can download the AIS consolidated feedback file (PDF). It will help the taxpayers to view all their AIS feedback (other than feedback, 'Information is correct') related information in one pdf for easy understanding.

**Q: How do I submit feedback on the information?**

**Ans:** You can submit feedback on active information displayed under TDS/TCS Information, SFT Information or Other information by following below mentioned steps:

**Step 1:** Click on "Optional" button mentioned in the Feedback column for relevant information. You will be directed to 'Add Feedback' screen.

**Step 2:** Choose the relevant feedback option and enter the feedback details (dependent on feedback option).

**Step 3:** Click "Submit" to submit the feedback.

**Q: What are the Feedback options available for submission of response against each Information detail?**

**Ans:** The feedback options will be displayed on each Information detail. You will be able to select only one of the available options for submitting feedback. Feedback options are as follows:

**Option A:** Information is correct if the information belongs to you and all the attributes of the Information are correct.

**Option B:** Information is not fully correct if the information belongs to you, but all the attributes of the Information are not correct. Upon selecting this option, relevant information fields will be displayed, and you will be able to update correct information details. e.g.- Account number, Information value, etc.

**Option C:** The Information relates to other PAN/year if you are aware of the Information, but it belongs to other person or other year. For example, joint ownership of property or receiving of mentioned amount in another year.

**Option D:** Information is duplicate/included in other information If the information displayed is already included in another information or it is a duplicate information.

**Option E:** Information is denied If you are unaware of this information/transaction and want to deny that the said information pertains to you.

**Option F:** Customized feedback- The feedback option will be displayed based on the information category.

**Q:** What will happen once I submit the feedback?

**Ans:** Upon successful submission of feedback on AIS information, the feedback will be displayed with the information and the modified value of the information will also be visible with the reported value. The activity history tab will also be updated, and you will be able to download Acknowledgement Receipt. Email and SMS confirmations for submission of feedback will also be sent.

**Q: Is there any limit on the number of times I can modify a given feedback?**

**Ans:** Currently, there is no limit on the number of times you can modify previously given feedbacks, but you need to provide the correct reason and proper remarks for the same as they may be taken up for review and approval before giving effect to modification.

**Q: How is my AIS feedback processed?**

**Ans:** The feedback provided by you will be captured in the Annual Information Statement (AIS) and based on the same, the modified value (value after feedback) will be displayed. The reported value and modified value will be shown separately. The feedback provided by you will also be considered to update the derived value (value derived after considering the taxpayer feedback) in Taxpayer Information Summary (TIS).




https://youtu.be/-JMVniVMLr0




# பரமத்தியில் ஒரு தொழில் சிகரம்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் லாப் ஸமாச்சார் இதழ் குழு நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூரில் வசித்து வரும் தொழில் முனைவோரும், ஸௌராஷ்ட்ர மத்திய சபையின் துணைத் தலைவரும், பரமத்திவேலூர் ஸௌராஷ்ட்ர சபைத் தலைவருமான **திரு. எம். ரவிச்சந்திரன்** அவர்களை நேரில் சந்தித்து நேர்காணல் செய்தது. மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற ஒரு நிதி நிறுவனத்தை இவர் நடத்தி வருகிறார்.

நமது ஸௌராஷ்ட்ர சமுதாய மக்கள் அப்பகுதியில் சுமார் 125 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். நாமக்கல் பகுதியில் 300 குடும்பங்கள் உள்ளன. பெரும்பாலான குடும்பங்கள் கைத்தறி நெசவுத் தொழிலையே பிரதான தொழிலாக கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் தற்போது, இத்துறையின் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் கல்வி மேம்பாட்டின் காரணமாக பலர் தங்களின் தொழிலை மாற்றிக்கொள்ளும் சூழல் அமைந்ததாக தெரிவித்தார்.



திரு. எம். ரவிச்சந்திரன் அவர்களும் கைத்தறி நெசவு நெய்யும் குடும்பத்தில் இருந்து வந்தவர் தான். இவரது வீட்டுப் பெயர் செம்பான், தந்தை பெயர் முத்துச்சாமி ஐயர், தாய், லட்சுமி ஆவர்.

தனது தகப்பனார் செய்த பத்திர பதிவு தொழிலை ஏற்று இவரும் செய்து வந்தார். பிறகு ரியல் எஸ்டேட் துறையிலும், நிதி நிறுவனமும் நடத்துவது என்று முனைந்து கடந்த ஐந்து வருடமாக வெற்றிகரமாக பரமத்தியில் **எம்.ஆர்.சி.கே.பெனிபிட் ஃபண்ட் நிதி லிட்.,** என்ற பெயரில் நடத்தி வருகிறார். மத்திய ரிசர்வு வங்கியின் உரிமம் பெற்று முறையாக நடைபெற்று வரும் இவரது நிறுவனம் அர்பன் வங்கி போன்று செயல்பாடுகளைக் கொண்டதாகும். இதுதவிர, மர இழைப்பகம், விவசாயம், பட்டு வளர்ப்பு, மெட்ரிக் பள்ளி முதலிய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றார். நம் சமுதாய மக்கள் இந்த தொழில்களில் ஈடுபட வேண்டும், அதற்கு தன்னாலான தொழில்நுட்ப உதவிகளையும் செய்வதாக தெரிவித்தார்.

வாங்கவந்தா பிடிக்கும்க
Life Long Tailor
லைஃப்லாங் டெய்லர்
ரெடிமேட் இல்லங்க உங்கள் அளவில் எங்கள் துணியில்
காட்டன் சர்ட் ரூ. 400/- முதல் காட்டன் பேண்ட் ரூ. 500/-முதல் மற்றும்
திருமணம், திருவிழாக்களுக்கு குரூப் சர்ட் சிறந்த முறையில் தைத்துக் கொடுக்கிறோம்
1-B, பச்சரிசிக்கார தோப்பு, காமராஜர் சாலை,
(தினமணி தியேட்டர் எதிர்சந்து), மதுரை-9.
81222 33001 90424 30763

முகக்கவசம் இறுக்கமாக இல்லாமல் சற்றே தளர்வாக இருப்பது நல்லது.

நம் சமூகத்தில், பொருளாதாரத்தால் பின் தங்கிய மக்களின் மேம்பாட்டிற்காக சிறு கடன்களை குறைந்த வட்டியில் வழங்கி வருகிறார். இவரது நிறுவனத்தில் சேமிப்புக் கணக்கு, வைப்புக் கணக்கு, ஆர்.டி., வசதிகள் உண்டு. சேமிப்புக் கணக்கிற்கு வட்டி 6% மும், வைப்புக் கணக்கிற்கு (Fixed Deposit) 9% மும் அவர்களின் விருப்பத்திற்கிணங்க தேவைப்படும் மாதத்தில் அளிக்கப்படும் என்று தெரிவித்தார். தொழில் மற்றும் பிற தேவைகளுக்கான கடனும் வழங்கப்படுகிறது. அதோடு நகைக்கடனும் முக்கியமாக அளிக்கப்படுவதாக தெரிவித்தார். தொழில் சார்ந்த உதவிகள், சமூகம் பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டி தாம் செய்யும் பணிகளின் மூலம் நம் சமூக மக்கள் மீது இவர் கொண்டுள்ள அக்கறை காணமுடிகிறது.





இது போன்ற பெனிபிட் பண்ட் நிறுவனம் நடத்துவதற்கு மத்திய ரிசர்வு வங்கியிடம் பங்கு தொகையாக குறைந்தது ரூபாய் ஒன்றரை லட்சம் செலுத்தினால் ரூபாய் மூன்று கோடி வரை பொதுமக்களிடம் பணப்பரிவர்த்தனையை மேற்கொள்ளலாம். (சிறு வங்கி நடத்துவதற்கு ரூபாய் நூறு கோடி பங்கு தொகை அளிக்க வேண்டும்).

இது தவிர, அரசு கூறும் வழிமுறைகளின் படி கட்டிட அமைப்பு, லாக்கர் போன்றவை இருக்க வேண்டும். அதற்குத் தகுந்த பணியாட்களை அமர்த்த வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ரிசர்வ் வங்கியிலிருந்து தணிக்கைக் குழுவினர் நிறுவனத்தை பரிசோதனை செய்வார்கள். கடுமையான முறையில் கையாள்வார்கள். தவறும் பட்சத்தில் உரிமம் ரத்தாகும்.



ஒருவர் ஒரு லட்சம் இவரது நிறுவனத்தில் வைப்புத் தொகையை செலுத்தினால் அதில் பத்து சதவிகிதத்தை இவர் ரிசர்வு வங்கிக்கு செலுத்த வேண்டும் போன்று பல்வேறு தகவல்களை கூறி, இவ்வாறான முறைகளில் ஒரு பெனிபிட் பண்ட் நிறுவனத்தை நிறுவி நடத்தலாம். அதற்கான முழு அதிகாரத்தை ஆர்பிஐ வழங்கும் என்றும் தெரிவித்தார். அதனடிப்படையில் தமது நிறுவனம் இயங்கி வருவதாகவும், ஆண்டிற்கு ரூ. 6 கோடிக்கு பரிவர்த்தனை கிடைப்பதாகத் தெரிவித்தார்.

நிதி சார்ந்த இத்தொழிலில், உடனடி பணம், நேரம், நாணயம் இவைகளை சரியாக கடைப்பிடித்து நடந்தால், மக்களின் நம்பகத்தன்மையை பெற்று வெற்றி பெறலாம் என்று கூறி நிறைவு செய்தார்.

- இதழ் குழு

இவர் நமது சேம்பர்-ன் செயல்பாடுகளை அறிந்து தாம் **உறுப்பினராக இணைய விருப்பம்** தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், நாமக்கல், பரமத்திவேலூர் பகுதியில் இருக்கும் தொழில் முனைவோர்களையும் உறுப்பினர்களாக இணைப்பதாகவும், சேம்பர்-ன் **சிட்கான் மாநாட்டிலும்** தாம் அவசியம் **பங்கு கொள்வதாக கூறினார்**.

UIN No. Applied
MFG. No. 8/25 D
பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.
எதிர்ப்பு சக்தி அதிகரிக்க
PLASMODIN CAPSULES 500 mg.
Increase Immunity Power

Prop. : B.K.D. Suresh
4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538

# ~~5%~~ 12%

# ஆடைகள், ஜவுளிகள் மற்றும் காலணிகளுக்கான ஜிஎஸ்டி வரி உயர்வு

ஆடைகள், ஜவுளிகள் மற்றும் காலணிகள் போன்ற முடிக்கப்பட்ட பொருட்களுக்கு (Finished Goods) பொருந்தும் சரக்கு மற்றும் சேவை வரியை (ஜி.எஸ்.டி) 5 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அரசாங்கம் உயர்த்தியுள்ளது.

இது ஜனவரி 2022 முதல் அமலுக்கு வருகிறது.

இதை மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) நவம்பர் 18 அன்று அறிவித்தது. துணிகள் மீதான ஜிஎஸ்டி விகிதம் ஜனவரி 2022 முதல் 5 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆடைகள் மற்றும் காலணிகள் ரூ. 1000 வரை 5 சதவீத வரியும், அதற்கு மேல் 12 சதவீதமாக இருந்தது. தற்போது அனைத்தும் 12 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

ஜவுளிகள் (நெய்த துணிகள், செயற்கை நூல்கள், பைல் துணிகள், சுங்கிடி சேலைகள், போர்வைகள், கூடாரங்கள், மேஜை துணி அல்லது சர்வீட்டுகள், விரிப்புகள் மற்றும் நாடா போன்ற பாகங்கள் உட்பட, விலைகள் 5 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதே போன்று காலணிகளின் விலையும் 5 சதவீதத்திலிருந்து 12% உயர்த்தப்பட்டுள்ளது. (ரூ. 1000/– ஜோடி வரை 5% அதற்கு மேல் 12%).

## GST Rates effective from 01.01.2022 for Textile Products

| S. No. | Textile Product | Rate (%) Till 31.12.2021 | Rate (%) From 01.01.2022 |
|---|---|---|---|
| 1 | Cotton | 5 | 5 |
| 2 | Cotton Yarn | 5 | 5 |
| 3 | Cotton Fabric | 5 | 12 |
| 4 | Synthetic Fibre | 18 | 12 |
| 5 | Artificial Fibre | 18 | 12 |
| 6 | Waste of Manmade fibre | 18 | 12 |
| 7 | Synthetic / Polyester Yarn | 12 | 12 |
| 8 | Artificial / Viscose Yarn | 12 | 12 |
| 9 | Fabric of Synthetic and Artificial Yarn | 5 | 12 |
| 10 | Garments | 5 - (Sale Value not exceeding Rs. 1000/- per Piece)<br>12 - (Sale Value not exceeding Rs. 1000/- per Piece) | 12 (irrespective of sale value) |
| 11 | Made-Ups | 5 - (Sale Value not exceeding Rs. 1000/- per Piece)<br>12 - (Sale Value not exceeding Rs. 1000/- per Piece) | 12 (irrespective of sale value) |

## GST Rates effective from 01.01.2022 on the Service of Textile Job Work

| S. No. | Service | Rate (%) Till 31.12.2021 | Rate (%) From 01.01.2022 |
|---|---|---|---|
| 1 | Job work in relation to Textile and Textile products | 5 | 5 |
| 2 | Dyeing or Printing of textile and textile products | 5 | 12 |


18 ஆம் ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
